Regd. No. M 5623 KURAL MALAR Thirukkural Tamil Weekly

# குறள்மலர்

ஆசிரியர்: திருக்குறள் வீ. முனிசாமி ★ துணை ஆசிரியர்: வே. ஆனைமுத்து

| மலர் | திருவள்ளுவர் ஆண்டு 1981, ஆவணி, 16 | இதழ் |
|---|---|---|
| 1 | 1-9-50 வெள்ளி | 8 |


## எருவும் நீரும்!

பயிர் வளர கண்கள் போன்ற இரு பெருந் துணைகளாக இருப்பவை **நீரும், எருவும்** ஆகும். எருவு நிலப்பரப்பு முழுதும் படரத் தெளிக்கப்படுவது. நீர் ஒரு வழியாக நிலத்தில் பாய்ச்சப்படுவது. பயிர் செழித்து வளருகிறது!

இப்பெண்ணும் அந்த ஆடவனும் காதல் கொண்டு விட்டதை அவ்வூரார் தெரிந்து கொண்டு ஊர்முழுதும் தூற்றிவிட்டார்களாம். இதனைக் **கௌவை** என்ற சொல்லால் ஆசிரியர் கூறுகின்றார். அத்துடன் நின்றுவிடவில்லை. அந்தப் பெண்ணின் அன்னையும் இதனைத் தெரிந்துகொண்டு தன் மகளுக்குப் புத்திகூறி கண்டிப்பும் செய்து வருகின்றாளாம்!

ஊரார் புகார்—அன்னையின் கண்டிப்புச் சொற்கள்! இவையிரண்டும் அவர்களின் **காதல்** என்னும் **பயிர்** வளர எருவும்—நீரும்போல உதவுகின்றனவாம். இந்த ஊர்ப் புகாரினாலும் (**கௌவையாலும்**) அன்னையின் கண்டிப்பு மொழிகளாலும் அவ்விருவரின் **காதல் கட்டுப்பாடு** மறைந்துவிடும் என்பது முற்றிலும் தவறான எண்ணம் என்பதைக் காதலர்கள் கூறிவிடுகிறார்கள். அவை இரண்டினாலும் காதல் வளரத்தான் செய்கின்றதாம்.

ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும் இந்நோய்.

T21211
R004F03

# வள்ளுவர் வழிப்பயணம்

'திருவீமு'

**முன் சுருக்கம்:-** [காலையில் புறப்பட்ட ஆசிரியர் வள்ளுவனார் வழிநெடுகத் தோன்றிய இயற்கை நிகழ்ச்சிகளைக் கண்டு பற்பல உயர்ந்த அரிய எண்ணங்களை வெளிப்படுத்திக்கொண்டே மாலைப்பொழுது வரும் வரையில் புத்தம் புதியவைகளைக் கூறியதோடு மாலைப்பொழுதுக்காட்சியினையும்கண்டு நல்லுரை வழங்கினார்கள். மாலைப்பொழுது கடந்து இரவு நெருங்கவே, விண்ணில் மின்னும் விண்மீன்களைப் பார்க்கின்றார்]

இயற்கையழகில் இனிமை பயப்பது முழுநிலவுக்காட்சியென்பது அனைவரும் அறிந்ததேயாகும். முழு நிலாத் தோற்றமும், நிலவு பொழியும் ஒளியும், ஆங்காங்கு மின்னும் மீன்களும் உலகம் கண்டின்புறும் உன்னதப் படக்காட்சி போன்றதன்றோ! ஆசிரியர் வள்ளுவனார் நாட்டம் வானத்தில் சென்றுகொண்டிருந்தது. முழு நிலாவினைப் பார்க்கின்றார்; நிலாவினைச் சுற்றித் திரியும் விண்மீன்களையும் கண்டு கண்டு மகிழ்ச்சியுறுகின்றார். இவ்வுலக வாழ்க்கை-இவ்வுலக இன்பம்-என்ற நோக்கத்திலேயே ஓடிக்கொண்டிருக்கும் ஆசிரியர் உள்ளம் வேறு எந்த உலகத்தைத்தான் எண்ணும்? அதுவும் இந்த நேரத்தில்! துன்ப உள்ளத்தையும் மலரவைக்கும் நிலவு நேரமல்லவா?

இன்பத்திற்கும் எல்லைகாணும் இன்னுரைகள் ஆசிரியர் உள்ளத்தில் பூக்கின்றன. வானம்-நிலவு-முழுநிலா-விண்மீன்கள்-அனைத்தும் ஒன்றுசேர்ந்து ஆசிரியர் உள்ளத்தினைக் கவர்ந்துகொண்டு காதலர் பேசுகின்ற பேச்சில் பேசவைக்கின்றன. இயற்கையழகின் முழு இன்பத்தினையும் காதலன் ஒருவனால்தான் அளந்து கூறவும் முடியும் என்பதாகக்கூட ஆசிரியர் எண்ணம் அமைந்துவிடும்போல் தோன்றுகிறது. இப்படிப்பட்ட முழுநிலா உலக மக்களுக்குத்தான் மிக அழகென்று படுமேயன்று, காதலனுக்கு அப்படித் தோன்றிவிட முடியாது என்பதுபோல குறிப்புக்காட்டுகின்றார் ஆசிரியர். ஏன்? அந்தக் காதலன், உலக் அழகு அத்தனையும் அந்தக் காதலி இடத்தில் இருக்கின்றதே என்று கூறுபவனாம்! காதலன் ஒருவன் தனது காதலிபால் இன்பத்தேன் சுவைத்தின்புற்று அவளுடைய பெருமைகளைப் பேசுவதென்றால் எப்படிப் பேசுவான்-பேசுகின்றான்என்பவற்றைத்தான் ஆசிரியர் பேசுகின்றார்.

தனது காதலியிடம் அழகு நிறைந்த முகத்தினைக்கண்டு காதலன் இன்புற்றானும். சந்திரன் அழகு அப்படியே நிறைந்துவழிய அவளுடையமுகம் காட்சியளிக்கின்றதாம். இந்த எண்ணத்துடனேயே அவன் வானத்தைப் பார்க்கின்றானும். சந்திரன் தோற்றம் அழகுபொலிய காட்சியளிக்கின்றது. விண்ணின் மீன்கள் மட்டும் அங்குமிங்குமாகத் திரிந்துகொண்டு இருக்கின்றனவாம். அவன் காட்சிக்கு அப்படிப்படுகின்றன. ஏன் அந்த விண்மீன்கள் அப்படி ஓடிக்கொண்டிருக்க வேண்டும்? அந்த விண்மீன்கள் மதிமயங்கி சந்திரன் யார் என்று-எது என்று தெரிந்து கொள்ள முடியாமல் கலங்கித் தடுமாறுகின்றனவாம். விண்மீன்களின் காட்சி ஆசிரியர் உள்ளத்தில் இன்பக் காதலனின் வாழ்க்கையினை நினைவுபடுத்த, அந்தக் காதலனின் வாய்ப்பேச்சில் கருத்தினை அழகுபட அமைத்துக் காட்டிவிடுகிறார் ஆசிரியர். தனது காதலியை அருகாமையில் வைத்துக்கொண்டு மதிமுகம் மிளிரும் அவள் அழகினையும் காதலன் சுவைக்கின்றான். வானத்துச் சந்திரனையும் பார்க்கின்றான். விண்ணில் இருக்கும் மீன்கள், காதலியின் மதிமுக அழகினைக்கண்டதும், உண்மையான சந்திரன் எது என்பதை அறிந்து கொள்ள முடியாமல் திகைத்துக் கலங்கி மயங்குகின்றனவே என்று கூறிவிடுகின்றான். அவன் எண்ணுகின்ற எண்ணங்களை வள்ளுவர் உள்ளம் எழுப்பிவிட ஆசிரியர் குறள் செய்து காண்பிக்கின்றார்.

மதியும், மடந்தைமுகனும் அறியாது
பதியில் கலங்கிய மீன்

வானத்தையும் சந்திரனையும் விண்மீன்களையும் கண்ட ஆசிரியருக்குக் காதலன் எண்ணங்கள் அருமையான கருத்தினைத்தந்து நின்றன.

இரவுப்பொழுது இன்பமொன்றினைத்தான் ஆசிரியருக்கு உணர்த்துகின்றது என்று சொல்லிவிடுவதற்கில்லை. காலம் இரண்டு என்பதாக வைத்துக்கொண்டால் இரவுக்காலம் பகற்காலம் (பகற்பொழுது) என்பதாகப் பேசலாமல்லவா? காலத்தின் நன்மையால் உலகில் அரிய பெரிய காரியங்களைச் சாதித்துவிடலாமே என்ற சிந்தனையில் ஆசிரியர் ஆழ்ந்துவிடுகின்றார். நாடாளும் மன்னனின் அறிவுத்திறன் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்றும் உள்ளம் நினைத்துப்பார்க்கின்றது. இரண்டு பறவைகளைக்கொண்டு அரிய அரசியல் உண்மைகளைக் கண்டுவிடுகின்றார்.

காகம்—காக்கை, ஒரு சாதாரண பறவை. பகற்பொழுது முழுதும் அங்குமிங்கும் பறந்த வண்ணம்தான் இருக்கின்றன அப்பறவைகள். அவைகளையும் எண்ணிப் பார்த்த ஆசிரியர் இரவில் வலிமையுடையதான கூகையைப்பற்றியும் நினைக்கின்றார். ஆந்தை—கோட்டான்—கூகை என்பவையென்னும் அப்பறவைக்குப் பகலில் ஒன்றுமே செய்யமுடியாதே. மிகவும் வலிமையுள்ளதுதான். அந்த இரவுப்பொழுதினை நினைத்தவுடனேயே ஆசிரியருக்குக் கூகை நினைவு வந்துவிடுகிறது. இரவில் காகத்தை எளிதில் கூகை வென்று கொன்றுவிடும். ஆனால் பகல் பொழுதிலோ வலிவுள்ள கூகையினைக் காகம் சாதாரணமாகவே கொன்றுவிடுமே! இதனைச் சிந்தித்து ஆசிரியர் சிறிது நேரம் வியப்பொடு கலந்து நகைப்பில் பேசுகிறார். காகம் எங்கே? கூகை எங்கே? அவ்வலிமையுள்ள கூகையைக் காகம் வென்றுவிடுமே! இரவுப் பொழுது இதனை நினைவுறுத்திவிட, நாடாளும் தலைவர்கள் பகைவர்களை வெல்லும் வழிதனைக் கூறுகிறார். நினைத்த காரியத்தினை முடித்து வைக்கப் பேருதவி செய்வது சாலம்—காலம் என்று ஒலிக்கின்றது ஆசிரியர் உள்ளம். காலம் வரும் பொழுது அதிவேகமாகக் காரியத்தைச் சாதித்துக்கொள்ளவேண்டும். அரசனுக்கு வெற்றியுண்டாக்கித்தரும் காலம் என்பதனைச் சிந்தித்துச் சிந்தித்து உணரவேண்டி இதனை அழகாக விளக்கிவிடுகின்றார்.

பகல்வெல்லும் கூகையைக் காக்கை
இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது

கூகையினைக் காக்கைப் பகலில் வென்றுவிடுவதேபோல நல்ல காலத்தில் (பொழுதில்) காரியங்களைச் செய்தால் அந்தப் போழுது வேந்தர்களுக்கு வெற்றிதரும் என்று பொன்னே போன்றதொரு நுட்பத்தினை ஆசிரியர் தெளிவுபடுத்திவிட்டார். இரவுப் பொழுது கழிந்துகொண்டிருக்கின்றது!

(தொடரும்)

## ஒன்றே போதும்.

"...திருக்குறள் தோன்றியதும் மக்கள் எல்லோரும் அதனைத் தமிழ் மறை என்றும், பொதுமறை என்றும் போற்றினர். அந்தணர் மூடிவைத்த ஆதி மறை எமக்கு வேண்டா என்றனர். வேதம் ஆற்றலிற் குறையுமென மறையாக வைக்கப்பட்டது. திருக்குறளோ, சொல்லச் சொல்ல ஆற்றலில் ஏற்றம் பெற்றது. திருக்குறள் ஒன்று கற்றால் ஒருவனுக்குப் போதும்.

—மணி. திருநாவுக்கரசர்.

# நவகாலி வீரர்

(A. முத்துசாமிப் பிள்ளை B. A.,)

தென்னாட்டு மக்களிடையே காணும் மனிதப் பண்பும் ஒற்றுமையும், வடநாட்டாரிடம் அவ்வளவாகக் காண்பதரிது. மதவெறியும் வேற்றுமையுணர்ச்சியும் தலைவிரித்துத் தாண்டவமாடும். அர்த்தமற்ற மதப்பற்றும் பிடிவாதமும் உடையவர். வங்கத்தின் ஓர் பகுதியாகிய திப்பாரா நவகாலி என்னும் மாவட்டத்தில், பயங்கரமான நிகழ்ச்சிகள் நடந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். மதம்மாற்றுதல் நிமித்தம் சொல்லொணாத அட்டூழியம் நடந்தது. அச்சத்தால் வீடுவாசல் துறந்து நாடுகடந்து குடிபெயர்ந்தோர் பலர். கொடுமை ஓங்கி வளர்ந்தது. நிலைமை கட்டுக்கடங்கவில்லை. கல்நெஞ்சத்தவரும் கலங்கும் காட்சி. கண்டோர் கேட்டோர் நடுநடுங்கும் கொலை பாதகச் செயல். இவையனைத்தும் கேட்ட காந்தியடிகளின் உள்ளம் வெந்து நொந்தது. வெயிலிற் புழுபோல் துடிதுடித்தது. அனல்மேல் மெழுகுபோல் உருகியது. கண்ணீர் பெருகிற்று. அல்லற்படும் மக்களை நினைந்துநினைந்து வருந்தினார். பிறர் துன்பம் காணச் சகியாத பேருள்ளம். செய்தித்தாள் அறிக்கையோடும், மேடைப்பேச்சுடனும், வாளாநிற்கும் வாய்ச்சொல் வீரர் அன்று, நம் நவகாலி வீரர்.

இப்பாதகச் செயல் நடக்கும் கொலைக் களத்திற்கு நேரில்சென்று காண எண்ணினார். வருந்தும் இந்துக்களுக்குப் பொருந்தும் உதவிசெய்ய விரும்பினார். வருந்தும் முகம்மதிய சகோதரர்களை நல்வழித் திருத்த ஆசைப்பட்டார். நவகாலி நோக்கி நடக்கலானார். "மதப்பேய் பிடித்து இரத்தவெறி கொண்டு திரியும் பண்பில்லாத மூடர்கள் மத்தியில், இவர் நல்லுரையும் நல்வாழ்வும் பயன்பெறுமா?

அன்பின் பிழம்பு; அறத்தின் உருவம்; பொறுமைக் கடல்; அந்தோ! மூர்க்கர்என் செய்வரோ? இவர் உயிர்க்கே இறுதி வருமோ?" என அஞ்சி நடுங்கினர் நாட்டு மக்கள் அனைவரும். இன்னல்படும் மக்கட்கு உதவிசெய்யும்பொருட்டுத் தனது உயிருக்கே பெருங்கேட்டைத் தேடிக் கொண்டனர். இவர் தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருந்தகை. பிறர் நன்மையே கருதும் பெருங்குடி மக்கட்குத் தங்கள் உயிர்மேல் பற்று இராதுபோலும்! ஒருதவி செய்வதால் கேடுவருமெனில், தன்னை விற்றாகினும் செய்யக்கடவன் என்னும் பொருள்கொண்ட

"ஒப்புரவினால் வருங்கேடு எனின்
அஃது ஒருவன்
விற்றுக் கோள் தக்கது உடைத்து"

குறள் என் நினைவிற்கு வந்தது. இவ்வுயர்ந்த உள்ளங்கொண்ட காந்தியடிகளின் பெருமையை நினைந்து வியப்புற்று மகிழ்ந்தேன். கடும்புலி வாழும் காட்டிலே செல்லும் இவ்வருும் பசுவைப் பின்தொடர்ந்தது என் சிந்தனை. "அன்பின் அழகுருவம் செல்கின்றது. அறவழியில் நிற்பவர் அன்பின் திறனை அறிவர். பண்பட்டுப் பயன் பெறுவர். நல்வழியில் நிற்பவர் நலமெய்துவர். அன்பின் ஆற்றலை அறவோரே அறிவர். அறிந்து அன்பராவர். அந்தோ! இவர் நாடிச்செல்லும் வெறியரோ, அறநெறி நில்லா அறிவிலிகள். பாவமே செய்து மறம்பற்றி நிற்பவர். அல்லன செய்யும் அற்பர். அன்பகத்தில்லா வன்கணாளர். கொடிய மூடர்கள். அறத்திற்கே துணை செய்யவல்ல அன்புக்கயிற்றால், மறமே செய்துவரும் இம்மாக்களை எவ்வாறு பிணிப்பது? இவர்தம் வன்மை உள்ளத்தைக் கனிவிப்பதெப்படி? அன்பு துணையாக மறத்தை மாற்றமுடியுமா? முடியாத செயலை மேற்கொண்டாரே." என்று எண்ணி எண்ணி ஏங்கினேன்.

உத்தமன் காந்தியடிகளின் உருவம் கண்டனர். புன்னகை நோக்கினர். பின்சென்றனர். தொழுதனர். இன்சொல்லும், கனிந்த உள்ளமும், அன்பு ததும்பும் செயலும், இக்கொடியோரையும் கவர்ந்து கனிவுறச் செய்தன. மிருகத் தன்மைவிட்டு மனிதப் பண்புகொண்டனர். காந்தியடிகளின் பெருமையிலே ஈடுபட்டனர். பின்தொடர்ந்து நன்மையே செய்ய முற்பட்டனர். தம்அடாத செயல் கண்டு நாணினர்; வருந்தினர்; திருந்தினர்.

"அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"

அறத்திற்கும் அன்பு துணை. மறத்தை மாற்றவும் அன்பு துணை வள்ளுவர் தென்னாட்டில் சொன்னார்; காந்தியடிகள் வடநாட்டில் வாழ்ந்து காட்டினார்.

<u>தொடர்ச்சி</u>

# அறத்துப்பால்] 1 [கடவுள் வாழ்த்து 8

**அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்**
**பிறவாழி நீந்தல் அரிது**

[அறஆழி - அறமாகிய கடல்போன்ற, அந்தணன் - இறைவனுடைய, தாள் - அடிகளை, சேர்ந்தார்க்கு - சேர்ந்தவர்க்கு, அல்லால் - அல்லாமல், (மற்றவர்களுக்கு) பிறஆழி - (அறமல்லாத) மற்ற துன்பமான கடலென்னும் வாழ்வினை, நீந்தல் - கடத்தல் அரிது - இயலாது (முடியாது)]

இறைவனுடைய (அந்தணனுடைய) இறைத்தன்மையினை அடிப்படையாகக் கொண்ட நல்வழிகளில் நிற்பவர்கள்தான் துன்பமென்னும் கடலாகிய வாழ்க்கையினைக்கடந்து இன்புறமுடியும். மற்றவர்களால் முடியாது.

விளக்கம்:—இக்குறட்பாவில் இறைவனை அந்தணன் என்ற பெயரால் அழைத்தார். ஏனெனில் அறம் என்னும் தன்மை நிறைந்தவன் ஆனபடியால் என்க. 'அந்தணன் என்போன் அறவோன்...' என்று பின்னர் கூறப்படும் குறட்பாவினால் தெளிவடைக. அறம் என்பதும் "மனத்துக்கண் மாசு இலன் ஆதல்—" என்ற குறட்பாவினால் விளக்கப்படுகிறது 'அறன்வலியுறுத்தல்' என்ற அதிகாரத்தில் கண்டுணர்க.

'சேர்தல்' என்பது நினைத்தல் என்பதாகும். வழிபடுதல் - அவ்வழி நிற்கப் பழகுதல் என்ற எண்ணத்திலேயே அவைகள் அமைக்கப்பட்டுள்ளன. அறம் என்பதற்குப் புறம்பானவைகளை, பிறஆழி என்றதனால் விளக்கிக் காட்டினார்.

'அந்தணன்' என்பது இறைவனைக் குறிக்கும் சொல்லாக அமைக்கப்பட்டிருந்தாலும் இறைத்தன்மை பொருந்திய பெரியார்களைப்பற்றிப் பேசும்பொழுதும் அந்தணன் என்ற சொல்லினைக் கூறிவைக்கின்றார் என்னும் உண்மையினைப் பிற இடங்களிலும் காணலாம். ஒழுக்கம் சிறந்தவர்களும் மனந்தூய்மை நிறைந்தவர்களும் தீமையணுகாது வாழ்வர் என்பது உறுதியிலும் உறுதியாகும். உலகறிந்த உண்மையினை இறைத் தன்மையில் காட்டி ஆசிரியர் உண்மை உரைக்கின்றார்.

பகுத்தறிவுக்கும் எக்காலத்திற்கும் எந்நாட்டவர்க்கும் ஒத்திருக்கும் இவ்வுண்மை குறிப்பிடத்தக்கது. 'தாள்' என்பது முந்திய குறட்பாக்களில் விளக்கப்பட்டது. அறம் என்கிற அந்தணனுடைய தாள் ஒரு மரக்கலம் போல் துணை செய்ய 'பிறஆழி'யினைக் கடத்தல் வேண்டும். வேறு வழி இல்லை. அந்தணன் என்பது காரணப்பெயராக அமைந்துள்ளதாகும். அருங்குணம் பூண்ட சீரிய முனிவர்களை அஃது குறிப்பிடுகின்றதுமாகும். பிறவியினாலும் குலக் கூட்டத்தினாலும் அந்தணர் என்று கூறிக் கொள்ளுவது பேதைமையும் அறிவீனமுமாகும்.

---

**நீங்கள் 'குறள் மலர்' உறுப்பினராகிவிட்டீர்களா?**

சிறுவர் பகுதி

# கொம்புத்தேன்—

[நண்பன்]

கந்தசாமிக்குக் குடும்பக் கவலை தாங்கமுடியவில்லை. ஏதாவது சிறு துன்பம் வந்து விட்டாலும் அதைப் பெரிதாக ஆக்கிக்கொண்டு, தன்னைத் தானே வருத்திக் கொள்ளுவது அவனுக்குப் பழக்கமாகி விட்டது. பலருடனும் கலந்து பேசி அளவளாவி மனதைக் கொஞ்சம் நிம்மதியாக வைத்துக்கொள்ளுவதையும் அவன் கற்கவில்லை. தன்னந்தனியாகவே தனித்திருந்து தனித்திருந்து ஓரியாக இருக்கும் அவன் மனம் கவலை கொண்டதாக இருந்தது என்பதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

நாளுக்கு நாள் துன்பமும் கவலையும் அதிகப்பட்டுவிட்டதாக கந்நசாமி நினைத்துக் கொண்டான். உலக வாழ்க்கை யென்பதும் மக்களுக்குத் துன்பம் ஏற்படுதல் இயற்கை யென்பதும் அவனுக்கு எப்படித் தெரியும்? அவன்தான் பலரிடமும் கலந்து பேசி அளவளாவும் பழக்கமும், படிப்பும் இல்லாதவனாயிற்றே!

ஏதோ பெரிய பெரிய துன்பங்கள் தனக்கு வந்துவிடுமோ என்று திகில் கொண்ட கந்தசாமி தனது கிராமத்தை விட்டு அருகாமையில் இருக்கும் காட்டிற்கு ஓடிவிட வேண்டும் என்று முடிவு கட்டிவிட்டான். மறுநாள் மாலையில் அப்படியே யாருக்கும் சொல்லாமல் வீட்டைவிட்டுப் புறப்பட்டுக் காட்டிற்குச் சென்று விட்டான். மிகப் பெரிய காடுதான் அது.

காட்டிற்குச் சென்ற கந்தசாமி கவலை யெல்லாம் மறந்து மரத்தடியொன்றில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். மத்தியானம் தூங்கி விழித்தான். வெகு தூரத்தில ஏதோ பெரிய கருமையான உருவம் கந்தசாமி இருக்கும் பக்கமாக வருவதைக் கண்டான. எழுந்து நின்று உற்றுப் பார்த்தான். ஒரு யானை இவனை நோக்கி, கொஞ்சம் வேகமாக வருவதாகத் தெரிந்தது. கந்தசாமிக்குக் கொஞ்சம் பயம் தோன்றுவதுபோல இருந்தது. சீக்கிரத்தில் அதிகப்பட்டு உடம்பெல்லாம் நடுங்க ஆரம்பித்து விட்டது. என்ன செய்வதென்று தோன்றவில்லை. ஓட்டம் எடுத்தான்; ஓடோடினான். யானையும் துரத்திக் கொண்டே கந்தசாமியின் பின்னே தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்தது.

கந்நசாமி, திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே ஓடினான். குடும்பக்கவலையும் துன்பமும் தாங்கமுடியாமல் காட்டிற்கு ஓடிவந்தோமே என்று எண்ணிக்கொண்டு இருந்த அவன் மனம் எவ்வளவு வேதனையடைந்தது தெரியுமா? ஏன் சொல்ல வேண்டும்? அவ்வளவு வேதனையோடு ஓடிக்கொண்டிருந்த அவன் ஏதோ ஒன்று காலைத் தடுக்கிவிட விழுந்தான், அந்தோ!

எங்கே விழுந்தானென்று அவனுக்கே தெரியவில்லை! பெரிய பாழுங் கிணற்றின் நடுவில் தொங்கிக் கொண்டிருக்கின்றான்என்பதைப் பிறகுதான் அவனால் உணர முடிந்தது. காலைத் தடுக்கிவிட்டவைகள் அப் பாழுங் கிணற்றின் மேற்புரத்தில் உடைந்திருந்த சுவற்றின் கற்கள்தான் என்பதைத் தெரிந்துகொண்டான்.

கிணற்றிலோ தண்ணீரில்லை. கிணற்றின் அடிப்பாகத்திற்கும் அவன் விழுந்துவிட முடியவில்லை. மிகம் பழமையானகிணறு ஆனபடியாய், கிணற்றின் பாதியளவுக்குமேல் காட்டுக் கொடிகள் படர்ந்து பின்னிக்கொண்டிருக்கவே அதன் நடுவில் மாட்டிக் கொண்டு வலையில் தொங்கிக் கொண்டிருப்பதைப் போல் இருந்தான். கொடிகளின் முட்கள் கீறி உடம்பின் மேல் காயங்கள் ஏற்பட்டிருப்பதையும் பார்த்தான். என் செய்வது?

சிறிது நேரம் கழித்துத் தலையை மேலே தூக்கிப் பார்த்தான். அடடா! அந்த யானையும் அவனைத் துரத்திக் கொண்டே வந்து கிணற்றை எட்டிப் பார்த்தது. தனது துதிக்கையைக் கிணற்றுக்குள் விடுவதைக் கண்ட அவன் மனம் எப்படி யிருக்கும்? துதிக்கை அவன் தலையின் அருகாமைக்கு வர முடிய வில்லை. பயமோ அதிகரித்து விட்டது. தலையைக் கொஞ்சம் கீழே சாய்த்துக் கொண்டான். கிணற்றின் கீழ்பாகத்தில் அவன் பார்வை சென்றது.

கிணற்றடியில் ஏதோ மினுமினுப்பாக மின்னிக் கொண்டிருந்தது. 'பகீர்' என்றது அவன் உள்ளம். மலைப்பாம்புகள் போன்ற தோற்றங்கள் நெளிவதைக் கண்டான். பாம்புகள்தான் என்பதை ஒரு வினாடிக்குள்ளேயே தெரிந்து கொண்டான். 'ஐயோ' என்று அலறிவிட வாயெடுத்தவன் அப்படியே சோர்ந்து விட்டான். மேலேயோ யானையின் துதிக்கை! கீழேயோ பாம்புகள். இடையில் தொங்குகிறான் கந்தசாமி!

வீட்டிலேயே இருந்திருந்தால்கூட இவ்வளவு மரண வேதனையடைந்திருக்க வேண்டியதில்லையே என்பது போன்றிருந்தது அவனுடைய உள்ளம். பைத்தியக்காரத்தனமாக இருக்கும் இடத்தை விட்டு ஓடிவந்தோமே என்று குமுறினான்.

இப்படியாக இருக்கும் சமயத்தில் காற்று பலமாகஅடிக்க ஆரம்பித்தது. காட்டில் மிருகங்கள் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்தது. நின்று நின்று பார்த்த யானையும் தனது துதிக்கையினை மெதுவாக வெளியே எடுத்துக் கொண்டிருந்தது. கந்தசாமியும் தலையை நிமிர்த்தினான், மேலே இருந்து சொட்டு சொட்டாக விழுவதைப் பார்த்தான்.

[10ம் பக்கம் பார்க்க]

## அமெரிக்காவில் - - பெண்கள்!

அமெரிக்காவில், படித்த பெண்களில் 100-க்கு 51 பேர்கள் திருமணத்தை வெறுப்பவர்கள். திருமணம் செய்து கொண்டவர்களில் 100-க்கு 51 பேர்கட்கு மேற்பட்டவர்கள் மணவிலக்கு (Divorce) செய்துகொண்டு வாழ்வபவர்கள். இதுவா வாழ்வின் குறிக்கோள்?

# பின்னணி சங்கீதம்

"வீணை"

## ஊருக்கு உபதேசம்!

'மனிதனுக்குச் சுலபமானதுஎது?' என ஒரு பேரறிஞர் பெரிய ஒரு ஞானியைக் கேட்டாராம். அதற்கு அவர் 'மற்றவனுக்குப் புத்திமதி சொல்லுவது' என்று பதில் சொன்னாராம். முழுக்க முழுக்க இது உண்மையானதுதான். திருடிவிட்டு சிறைத்தண்டனையடைந்தவன்கூட போகும் பொழுது தன்னுடைய நண்பர்களைப் பார்த்து 'என்னமோ நான் அகப்பட்டுக் கொண்டுவிட்டேன். நீங்களாவது புத்திசாலிகளாய் (!) இருங்கள்' என்று சொல்லித்தான் செல்லுகின்றான் !!

கல்வி-அறிவு-பணம்-உழைப்பு ஒன்றுமே வேண்டாம் இந்த வேலைக்கு. 'புத்திமதி' சொல்லும் வேலையில் சிலரைவிட்டுவிட்டால் மணிக்கணக்கில் சொல்லிக் கொண்டிருக்கத் தயாராக இருக்கிறார்கள். "இவ்வளவெல்லாம் சொல்லுகிறீர்களே, தங்கள் விஷயம்......?" என்று கேட்டுவிடக் கூடாது!

புத்திமதியையே-அதாவது உபதேசம் செய்வதையே – யாருக்கு? மற்றவர்களுக்கு மட்டும் (!) —தங்களுடைய தொழிலாகக் கொண்டவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள்தான் அரசியல் தலைவர்கள். 'கட்சி பேதங்கள் கூடாது-நமக்குள் சிறுச்சிறு மனப்பான்மைகளை அறவே ஒழிக்க வேண்டும்' என்று பேசும் தேசியத் தலைவர்கள் போட்டி மனப்பான்மையை மக்களுக்குக் காட்டிக்கொடுக்கிறார்கள் என்றால் அது கேலிப் பேச்சுக்கு இடமாகத்தானே முடியும்? 'நாட்டில் கட்சி பேதங்கள் இருக்கக் கூடாது — வேறுபாடுகள் ஒழிக்கப்பட வேண்டும்' என்று பாடுபடுகிற நம்போன்றார்களுக்கு என் எரிச்சலை உண்டு பண்ணாது? 'பெரிய தலைகளே இப்படி முட்டிக் கொள்ளலாமா?' என்றுதான் கேட்கின்றோம். வடநாட்டில் காங்கிரஸ் போட்டி நடந்ததில் சம்பந்தப்பட்ட 'தலைகள்' சாதாரணமானவை என்று சொல்லமுடியுமா? ஒற்றுமையாகப் போவதை - 'ஒருமை' மனப்பான்மையினைக் கெடுத்து 'போட்டி போடுங்கள்'என்று கிண்டிவிடுகிறார்களே- இதுதகுமா?இதுமுறையா? இது நாட்டைக் கெடுப்பதாயிற்றே-என்று நாளைக்கு யாராவது ஒரு ஆள் கேட்டால் நாம் என்ன பதில் சொல்வது?

இதில், இன்னுமொன்று. புகைச்சலாக வந்து கொண்டிருந்தது! நேருஜி, கிருபளானிக்கு ஆதரவு தந்திருந்ததாகவும், பட்டேல் முதலிய தலைவர்கள் வேறுமுகமாய் இருந்ததாகவும். இந்த தேர்தலால் நேருவுக்கும் பட்டேலுக்குங் கூட பேத அபிப்பிராயங்கள் முளைத்திருக்கலாம் என்றும் பேசுகிறார்களே! தாண்டன் என்றால் என்ன, இலேசானவரா? - இல்லை - சங்கர் ராவ் தேவ், கிருபளானி இவர்கள்தான் அஞ்ஞானிகளா? அப்பாடா! 'நமக்குள் வேற்றுமை இருக்கக் கூடாது' என்பது போன்ற வாக்கியங்கள் ஒரு பத்தாயிரம் தடவைகளாவது இவர்கள் வாயினால் வந்திருக்குமே! வருங்காலத் தேர்தலில் 'தலைவர்கள் மட்டும் என்ன - அவர்களும் அப்படித்தான்' என்று கேவலமாகப் பேசிவிடுவார்களே என்றுதான் விசனப்படுகிறோம்!

"எனக்குப் பிரியமில்லை; என்னுடைய நண்பர்கள்தான் நிற்கச்சொன்னார்கள்" என்றாராம் தாண்டன். திருட்டுத்தனமாகப் பணத்தை செலவுசெய்துவிட்டு தோற்றுப் போன (அல்லது) ஜெயித்துத்தான்விட்ட ஓட்டை (ஓட்டை என்றால் ஓட்டுப்பெற்று வருகிற - என்று அர்த்தம்!) முனிசிபாலிடி கவுன்சிலர்கூட சொல்லமாட்டாரே இப்படி! போகட்டும்!

இங்குதான் என்ன வாழ்கிறது? தமிழ் நாட்டிலுந்தான் அப்படி. 'கட்சிபேதங்களை விட்டுவிடுங்கள் - விட்டுவிடுங்கள்' என்று கதறுகிற - த. நா. கா. க. காங்கிரஸ்காரர்களும் தொண்டர் உள்ளங்களைக்கெடுக்கிறார்கள்! அங்கே அ. இ. கா. க; இங்கே த. நா. கா. க!

"இவர்கள் உபதேசங்களை இனி யாரும் கேட்கவேகூடாது. சொல்லுவது ஒன்று - செய்வதுஒன்று"—என்பதாகச் சில அறிஞர்கள் பேசுகிறார்கள் என்றால், மேற்படி போட்டித் தலைவர்கள் இனி மெய்பேசி எப்படி வாழமுடியும்?

ஒரு சாமியார் - நல்ல சாது - 'சிற்றின்பமே நாசம் - சிற்றின்பத்தை விரும்பாதீர்கள்' என்று பிரசங்கம் செய்துகொண்டு வந்தாராம். 'என்னடா இப்படி உபதேசிக்கிறாரே; யாரால் இவரைப் பின்பற்றி வாழமுடியும்?'என்று தொண்டர்கள் நினைத்துக்கொண்டு இருந்தார்களாம். இப்படியாக இருக்கையில் ஒரு சந்தர்ப்பம் அந்த சாதுக்கே ஏற்பட்டுவிட மங்கையொருத்திபால் மையல் கொண்டு மருவி வாழும் மனைவாழ்க்கை போல அவரும் ஆரம்பித்துவிட்டாராம்! தொண்டர்கள் ஓடோடிச் சென்று சாதுவைப் பார்த்து "அடிகளே! எங்களுக்கு அப்படியெல்லாம் உபதேசம் செய்துவிட்டுத் தாங்களே இறங்கிவிட்டீர்களே இந்த......" என்று பேச ஆரம்பித்துவிட்டார்களாம். குருநாதர் மகா கோபம் கொண்டு சொல்லுகிறார்: "அட பாவிகளே! அஞ்ஞானிகளே! உங்களைப் போலவா நானும்? சிற்றின்பம்-காமம்-மோகம் - இச்சை - மயக்கம் - காம விகாரம்-பெண்ணாசை என்கிற வேகத்தினால் இழுக்கப்பட்டு நீங்கள் போய் விழுகிறீர்கள்! ஆனால், நானோ பரமாத்மாவிடம் எனது உள்ளத்தை ஒப்படைத்து விட்டு, 'கேவலம்-இது ஒரு கடமை' என்று இருக்கின்றேன். தெரிகிறதா? இனி இப்படிப் பேசாதீர்கள்"—என்ற பதிலைக் கேட்டதும், தொண்டர்களும் "ஆமாம் சுவாமி, அப்படித்தான் இந்நாள் வரை இருந்துவிட்டோம். மன்னிக்க வேண்டும். இனி தங்கள் மாதிரியே இருக்கின்றோம்!" என்றனராம்!

## விற்பனையாளர்கள்

பட்டியல்படி, விற்பனையாளர்கள் தங்கள் கட்டணத்தை உடனே அனுப்ப வேண்டுகின்றோம்.

18-8-50 இதழ்வரையில், அஞ்சல் வழியாக இதழ்களைப் பெற்ற விற்பனையாளர்கட்கு, அவரவர் பெயர்களோடு கூடிய முழு முகவரியும் எழுதி அனுப்பினோம். 25—8—50 முதல்,

LOCAL AGENT,
"KURAL MALAR"

(உள்ளூர் விற்பனையாளர், 'குறள் மலர்') என்றே முகவரி எழுதி அனுப்பப்படும்.

அஞ்சல் நிலையத்திற்கு விற்பனையாளர்கள் தாங்களே நேரில் சென்று, ஒவ்வொரு கிழமையும் இதழ்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம். இதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது.

—பொறுப்பாளர்.

## பொருத்தருள்க!

"குறள் மலர்" நன்மையை முன்னிட்டு "உள்ளூர் விற்பனையாளர்" (Local Agent) என்ற முகவரிக்கு இதழ்க் கட்டுகளை அனுப்பியது ஒரு சிலருக்குச் சற்று அசௌகரியத்தை ஏற்படுத்தியிருக்கும் என நம்புகிறோம். எனினும் நம் 'குறள் மலர்' வளர்ச்சியையும், செலவுச் சிக்கனத்தைக் கருதியும் விற்பனையாளராக இருக்கும் அன்பர்கள் இச்சிறு தொந்தரவைப் பொருட்படுத்தாமலிருக்க வேண்டுவதுடன் இனியும், அம்முறையிலேயே தங்கள் இதழ்க்கட்டுகளை அஞ்சல் நிலையத்திற்கே சென்று பெற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

—பொறுப்பாளர்

குறள் மலர்

1—9—50] திருச்சி [வெள்ளி

## யார் காரணம்?

"சிரமறுத்தல் அரசனுக்கோர் பொழுதுபோக்கு-நமக்கெல்லாம் உயிரின் வாதை" என்றார் புரட்சிக் கவிஞர். ஆ! என்னே--பொன்னுரைகள்! இதனை மெய்ப்பித்துக் காட்டும் நமது அரசியலாரைப் பாராட்டுகிறோம்! ஏன்? கவிஞரின் புகழினை உயர்த்திவிட்டதற்காக.

பட்டினியும் பசியும் சித்திரவதை செய்கிறது நாட்டில் என்றால் அதற்குக் காரணம் செய்யவேண்டிய கடமையினை அரசியலார் செய்யவில்லை என்று கூறுதல் முறையற்றதாக இருக்க முடியாது. இரங்கூனிலிருந்து வந்திருக்கும் செய்தியொன்று நமது ஆட்சியாளரின் அலட்சியத்தையும் ஆமை வேகத்தையும் காட்டிவிடுகின்றது. "அறிவுடையார் ஆவது அறிவார்" என்றார் ஆசிரியர் வள்ளுவனார். எதிர்காலத்தில் இப்படி வருமே—இவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமே என்று அறிஞர்கள் அறிந்துகொள்ளுவார்கள் என்றார் ஆசிரியர். இவ்வாக்கு பொய்யாகிவிட்டதே நமது ஆட்சியாளர்கள் நடத்தையிலிருந்து என்பதை அறிய வருந்துகின்றோம். உலகத்திற்கே அரிசி உதவும், ஆதரவுதரும் **பர்மா** இருக்க—அன்றும்—இன்றும்—என்றும் வேண்டியவர்கட்கெல்லாம் வேண்டிய அளவு கொடுக்கும் அவ்வுதவியினைப் பயன்படுத்தாது, இங்கு மக்களைப் பட்டினிபோட்டு, வாய்ச்சொல் வீரராக இருப்பது தகுமா? இது அவர்கட்குப் பொழுதுபோக்காக இருக்கலாம்? இந்தியத் **தூதுவர்** தாமதமாக வந்து பர்மா அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்ததே என்று வருந்தி நமக்குச் செய்தி கிடைத்திருக்கின்றது. இந்த ஒப்பந்தம் 1950 ஆகஸ்ட், 18 முதற்கொண்டு 1951 ஜூன் 30 வரை அமுலில் இருக்குமென்று தெரிகிறது.

'பசியால் **கொடுந்துன்பம்** அடைகின்ற தென்னிந்திய மக்களுக்கு இச்செய்தி (இந்த ஒப்பந்தம்) மிகவும் மகிழ்ச்சிதரும் என்று எண்ணுகின்றோம்' என்பதாகப் பர்மாவிலிருந்து வெளிவரும் **'நியூ டைம்ஸ்' (New Times of Burma)** என்ற பத்திரிகை கூறுகிறது. இங்கு மக்கள் படும் வேதனையினை அவ்வளவுதூரம் உணர்ந்து எழுதுகிறது என்றால், கண்ணுக்குக் கண் நேராகப் பார்த்துக்கொண்டிருக்கும் பதவித் தலைவர்கள் பறந்தோடி இருக்கவேண்டாமா?

**'இந்த ஆண்டில், பர்மாவிலிருந்து அரிசிவாங்க மிகத் தாமதமாக இந்தியா வந்தது'** என்பதாக அந்தச் செய்தி கூறுகிறது. சர்வசாதாரணமாக எடுத்துக்கொண்டு பேசுவோம். நம் நாட்டின் நிலை என்ன? 'பட்டினியை' மிக இலகுவில் விலக்கி இருக்கலாம் என்ற உண்மையறிந்த நாம் — அறிந்துகொள்ளுகின்ற நாம் யாரைக் குறை சொல்லுவது? பட்டினிப்பசியை இங்கே தாண்டவமாட விட்டதற்கு யார் காரணம்?

சிலோன் அரசாங்கத்தார் மேதைகள் என்றுதான் கூற வேண்டும். அவர்கள் பர்மா அரசாங்கத்தாருடன் ஆகஸ்ட் 10-ம் தேதியே ஒப்பந்தம் செய்துகொண்டுவிட்டனர். அவர்கள், போதிய அளவுக்கும் ஒப்பந்தம் செய்திருக்கின்றனர். நம்மவர்கள் அனுப்பியவர் ஆகஸ்ட் 18-ம் தேதிதான் காரியத்தை முடிக்க முடிந்ததாம்! இருந்தாலும் **சிலோன்** அரசாங்கத்தார் நம்மவர்களுக்கு மட்டமானவர்கள்தான்! **அவர்களுக்கு அதிகம் பேசத்தெரியாதல்லவா?** இலங்கையிலிருந்து பத்தாயிரம் டன் அரிசி செப்டம்பர் இரண்டாவது வாரத்தில் கிடைக்குமென்ற செய்தியும் கிடைத்திருக்கின்றது.

செய்யத்தக்க வேண்டியவைகளை அவ்வப்பொழுது செய்யாமையால் கெடுதி ஏற்படும் என்பது உலக உண்மையன்றோ? "**....செயத்தக்க செய்யாமையானும் கெடும்**" என்னும் அறவுரையினை இனியேனும் நம் அரசியலார் பின்பற்றுவார்களா?

### தலைசிறந்த நூல்!

தமிழ் நூல்களில் தலைசிறந்து விளங்குவது திருக்குறளே. உயர்வுடனும், தூய்மையுடனும் உள்ளக் கருத்துக்களை எடுத்து விளக்கிய நூல்களில் அதுவும் ஒன்றாகும்.

திருக்குறளாசிரியர் வகுப்புக்களையும், மக்கட்பிரிவுகளையும், நம்பிக்கைகளையும் பொருட்படுத்தாமல் மக்கட் குழுவிற்கே உரியவகையில் எழுதிச் செல்கிறார். ஆன்ற நல்லொழுக்கத்தையும், கலப்பற்ற நல்லறத்தினையுமே வகுத்துச் செல்கிறார். வாய்மையும் அறமும் அறங்களில் தலைசிறந்தன என்று பறைசாற்றுகிறார். இல்லற வாழ்க்கைக்கும் குடியியல் வாழ்க்கைக்கும் உரிய உயர்ந்த ஒழுக்க முறைகளை ஒன்றுபடுத்தி விதித்துச் செல்லுகின்றார்.

—M. Ariel.

## இதுதானப்பா வாழ்க்கை!

தன்னைக் கேட்காமலேயே, மனிதன் இந்த உலகிற்கு கொண்டுவரப்படுகிறான் — (பிறக்கின்றான்). அவன் போகவிரும்பாதபோது, உலகிலிருந்து கொண்டுபோகப் படுகிறான் — (இறக்கின்றான்). அவன் குழந்தையாக இருக்கும்போது, நல்ல வயது நிறைந்த பெண்கள் அவனை முத்தம் இடுகின்றார்கள்! அவன் பெரியவனாக ஆனபிறகு, சிறு சிறு பெண்கள்தான் அவனிடம் செல்லுகின்றனர். உழைத்து உடம்பைப் பயன்படுத்தி — (உடம்பைச் செலவு செய்து) பொருளீட்டுகின்றான். பிறகு பொருளைச் செலவு செய்து இழந்த உடம்பைப் பெற ஆசைப்படுகிறான்!

# கண்ணீர்ப் படை!

— வே. ஆனைமுத்து —

மக்களின் வாழ்வைச் செம்மைப்படுத்துவது அரசியலாரின் பொறுப்புக்குட்பட்டது. மக்கட் குழுவினரும், பண்பு நிறைந்த பெரியோரும், பிறநிலையிலுள்ள தலைவர்களும் மக்களின் வாழ்வில் பொலிவை மலரச்செய்யமுடியும். ஆனால், அரசியலார் செய்யக்கூடிய அளவு ஏற்றமும் பெற்றியும் உடைய நற்செயல்களை அவர்கள் செய்துமுடித்தல் அருமையானது.

நாட்டில் தோன்றும் நலிவுகட்குப் பல அடிப்படைகள் இருக்கக்கூடும். எனினும் எந்த அடிப்படையில் கேடுகள் தோன்றினாலும், முடிந்த அளவு அரசியலார் 'தீர்க்கக் கூடுமாகலின், கேடுநேர்ந்தபோதும் அரசியலாரையே மக்கள் வெறுப்பர்.

நாட்டில் மழையில்லை யென்ற வறண்ட நிலை வளரும்போதும், வருவாய்க்குப் போதிய தொழில்வழிகள் இல்லையே என்ற ஏக்கம் மக்களைத் தாக்கும்போதும் தம் முயற்சிகளால் நலன்களையடைவதற்காகப் பட்ட பாடுகள் பயனற்று வீழும்போதும், மக்கள் மன்னனையே உன்னிப் பார்ப்பர்.

இத்தகைய பேருண்மையைத் தெளிவாக அறிந்து தமது நிலைக்குத் தாமே வருந்திக் கூறும் தகைமையை இன்றைய அரசியல் உலகினர் பெற்றவராகக் காணப்படுகின்றார் அல்லர்.

மக்களின் உண்மை நிலையையும், அவர்களது கூட்டு முயற்சியினால் ஒன்றுபடக் கூடிய மிஞ்சிய ஆற்றலையும், பொருட்படுத்திப் பாராத எந்நாட்டு ஆட்சியாளர்க்கும் மேற்கண்ட நிலைமையை உணரும் உறுதி இருப்பது அரிது.

"மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்"

என்று கூறி, மழை பெய்யாவிட்டாலும், வருவாய் வழிகள் சுருங்கிவிட்டாலும் எனது நாட்டு மக்கள் என்னைத்தானே வெறுப்பர் என்று உணர்ந்த பழந்தமிழ் வேந்தர்க்கும், இன்றைய ஆட்சியாளர்கட்கும் எத்தனையோமடங்கு வேற்றுமை காணப்படும்.

வருவாய்கட்கான வழிகள் குறையலாம். எனினும் செலவினங்களைக் குறைத்துக் கொள்ளும் திறம் ஆட்சியாளர்க்கு அமைந்தால், ஆட்சி மாட்சிமையுடையதாக வழியுண்டு என்பதை அறிதல்வேண்டும்.

மக்கள் வரிச்சுமை தாங்கமாட்டாதவராய் வறுமை பிணிக்கப்பட்டவராய்க் கைக்கூலியும் கரவுச் செயல்களும் நெருக்கத் துன்பப்படுபவராய்க் கிடந்து, கண்ணீர் பெருக்கினரானால், அது எதனைக் காட்டும்?

'கொடுங்கோலர் ஆட்சியில் கொடுமை கட்குட்பட்டு வாழ்வதைக்காட்டிலும், கடும் புலியும் கொடிய விலங்குகளும் திரியும் காடுகளில் வாழ்தல் நலமாயிற்றே! இவர்களது ஆட்சியின்கீழ்ப் படும் துன்பத்தைப் பொறுக்கவும் முடியவில்லையே' எனக் கூறிக் கண்ணீர்வடிப்பர்.

வாழ்வில் இன்னலைக்கண்ட மக்கள் வடிக்கும் கண்ணீர் வாளின் கூர்மையை விடக் கூர்மையானது.

அல்லல்பட்டு ஆற்றாது அழுதகண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

என்று வள்ளுவனார் கூறியது இது கருதித் தான்.

சட்ட மன்றங்களில் நேரும் எதிர்ப்புகள் பொதுமேடைகளில் கிடைக்கும் சாடுதல்கள், எதிர்க்கட்சிக்காரர்களின் தாக்குதல்கள் இவை எல்லாவற்றையும்விட வலிவு மிக்க படை - அரசியலை அழிக்கும் வெள்ளம் ஏழைகளின் கண்ணீர்தான்.

---

## ★ மதிப்புரை ★

### 'சங்குநாதம்'

சிவகங்கையிலிருந்து திரு பெரி. சுவாமிநாதன் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவரும் கிழமையிதழ். சிறந்த அரசியல் கருத்துக்களும், கவிதைகளும், சிறுகதைப் பகுதிகளும் அணிசெய்கின்றன.

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 4—8—0 |
| 6 மாத சந்தா | 2—8—0 |
| தனி இதழ் | 0—1—6 |

### 'பாலர் மோகினி'

யாரோ ஒருவரைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு 'மருமான் மருமாள்களுக்'கென வெளிவரும் 'கதை'த் தொகுதியாம். ஒரு 'வர்ணஜாலப்' படங்கூட இருக்கிறது. திருவினை ஆக்கும் முயற்சிதான்.

ஒரு தொகுதியின் விலை அணா 2

—அரங்கராசன்

# அற்பர்கள்!

[பகவன்]

நாம் பழகும் மக்களில் நண்பர்களில் பலர் உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பேசுபவர்களாக இருக்கின்றார்கள்! இதனை அவரவர்கள் தனித்திருந்து பிறந்த தன்மைக்கும் குலத்திற்கும் இழிவையும் பழியையும் கொடுக்கின்றதே என்று நினைப்பதேயில்லை. என்ன அபாயகரமான வாழ்க்கை!

பலர், இன்பமும் மனநிம்மதியும் அடைவதாக நினைக்கின்றனர். எவ்வாறு? மற்றவனைக் கேவலப்படுத்துவதிலும் அவமானப்படுத்துவதிலும்! இப்படிப்பட்டவர்கள் பகைவர்களாக இருந்தொழிந்தாலும் கவலையில்லையே! நண்பர்களாகவே பழகிக் கொண்டு மற்றவனுக்கு அவமானம் ஏற்படுவதில் ஒரு சிறு மகிழ்ச்சிகொள்ளுவதாக நினைக்கிறார்களே! தூ! என்ன அற்ப வாழ்க்கை!

ஆசிரியர் வள்ளுவனார் சில நண்பர்களை —நண்பர்கள்போல் நடந்துகொள்ளும் சிலரைப்பற்றி நன்றாக எழுதிக்காண்பிக்கின்றார்கள். தீயர்கள் - கொடியர்கள் - வஞ்சகர்கள் - அற்ப எண்ணம் படைத்தவர்கள் - என்றுதான் குறித்துக் குறித்துக் காட்டிப் பேசுகிறார்கள்.

'நெருங்கவிடாதே' இந்த அற்பர்களை என்கிறது குறட்பா. இவர்களை அணுகவிட்டாலும் ஆபத்து என்பதுதான் குறளற உண்மை. நம் வீட்டிற்கு வருவார்கள் - மிகச்சிறப்புடன் உரையாடுவார்கள் - நம்மைப்பற்றிப் பெருமையாகப் போற்றுவார்கள் - இவ்வளவும் எப்பொழுது? நாம் தனியாக இருக்கும்பொழுதுதானும்!

அட, அற்பனே! இவ்வளவு நயமாகப் பேசும் இந்த வஞ்சகன், நாலுபேர் மத்தியில் - நாம் கூட்டத்தில் இருக்கும்பொழுது - பலபேருடன் பேசிக்கொண்டு இருக்கும் பொழுது - நம்மைப்பற்றியே கேவலப்படுத்திப் பேசிவிடுவானும்! "ஆ! இவனா இப்படிப் பேசுகிறான்?" என்று நமக்குத் தோன்றிவிடுமாம்! தனியாக வீட்டில் எப்படியெல்லாம் புகழ்ந்தான் - பாராட்டினான்! ஈனத்தனமும், அற்ப எண்ணமும் பொறாமையும், வஞ்சகமும், சூதும் நிறைந்த - நாயினும் கேடான - இவனை இனி நம் அருகே சேரவும் விடலாமா? இதோ குறள் - அப்படி நடக்கும் அற்பனை நினைத்துப்பார்!

**எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ**
**மன்றில் பழிப்பார் தொடர்பு.**

[மனைக்கெழீஇ - வீட்டில் தனித்த பொழுது அணைந்தணைந்து பேசி, மன்றில் பழிப்பார் - சபைபோன்ற இடத்தில் பழித்துப் பேசுபவருடைய, தொடர்பு - நட்பினை, எனைத்தும் குறுகுதல் - மிகச்சிறிய அளவு கூட சம்பந்தப்பட, ஓம்பல் - விடாதே.]

# மரப் பாவை

(மூத்து)

ஆம்! அழகுக்கு அழகுதரும் அணிகலன்களும், மினுக்கிய மேனியும், கவர்ச்சியான தோற்றமும் உடைய அவன், மரப்பாவைதான்! மரம், விலங்கு முதலிய எல்லா உயிர்களும் உணவுகொள்கின்றன; உயிர்ப் பாதுகாப்புக்காக ஏதோ ஓரிடத்தில் வாழ்கின்றன. தமது இன்பக் கூட்டுறவால், அல்லது வளர்ச்சியின் முதிர்வால் தத்தம் இன உயிர்களைப்பெருக்குகின்றன. ஆனால் ஒன்றுமட்டும் அவைகட்கு உரியதாகாது.

தான்செய்வது நல்லசெய்கைதான் என்பதை உணரவோ, தீயசெயல் என்பதை அறிந்து அகற்றவோ முடியாது. இன்பத்தை ஏதோ ஒருவகையில் பெறுகின்றது ஆனால் உண்மையை எந்தவகையிலும் உணரமுடிவதில்லை. ஏனெனின் அறிவு இல்லை அதற்கு.

'தான் தவறுசெய்ய அஞ்சவேண்டும்; தவறுசெய்தபோது, அதற்காக வருந்தித் திருந்தவேண்டும்' என்ற பகுத்துணர்வு அல்லது நாணம் என்றதன்மையும் அதற்கு இல்லை.

தவறுசெய்தபோது வருந்தும் பண்பு மக்கட்குத்தான் உண்டு; அதுவே மக்கட்குச் சிறப்பைத் தருவது.

'அவன் குடிப்பதில் தவறாதவன், கொள்ளைக்கு அஞ்சாதவன்; கொலைக்கு முன்னிற்பவன்; கற்பழிப்பதைக் கலையாகக்கொண்டவன்; ஏழைகளை ஏய்ப்பதில் வல்லவன்' என்றெல்லாம் தூற்றுகின்றனர். 'மாடிவீடும் புடைசூழ்ந்த கூட்டமும் உள்ள வாழ்வோடு அவன் பெருவாழ்வு நடத்துகிறான்; அவன் மட்டும் வாழ்வு பெறாதவனா என்ன?' என்று உலக மக்கள் நினைக்கின்றனர்.

"ஏவிய வேலைகளைச் செய்ய எடுபிடி ஆட்களும், கூவிய குரலுக்கு ஓடிவரும் பணியாட்களும் அவன் பெற்றிருக்கின்றான்; அவன் வாழ்வே அரசவாழ்வு" என்று நம்புகின்றனர்.

'அது மக்கள் வாழ்வு ஆகாது; அவன் மக்கள் இனத்தைச் சேர்ந்தவனும் ஆகான். அவன் மகனாக இயங்காமல் - மக்களில் ஒருவனாக நடமாடாமல், மரப் பாவையாக நடக்கின்றான். தான்செய்த தவறுகட்கு வெட்கப்படாதவனாக, தனது வாழ்வை மட்டுமே வளப்படுத்திக்கொள்பவனாக வாழும் அவன் மரப் பாவையேதான். அவனது ஆரவார வாழ்வு, புறக்கோலக் காட்சி இவற்றைக் கண்டு நீ மயக்கம் கொள்வது கூடாது. எடுப்பான தோள்களும், திரண்ட கைகளும், விரிந்த மார்பும் கவர்ச்சியான தோற்றமும் உள்ள ஒரு மரப்பாவையை - மரப்பாய்ச்சியைச் செய்து பட்டாடைபோர்த்தி, பொன்னணி பூட்டி, ஆடச்செய்கிறார்களே, அது எப்படி? ஆட்டிவைப்பதற்குத் துணையாக உள்ள கயிறு ஒன்றைக் கருவியாகக்கொண்டல்லவா? மரப்பாவை ஆடுவது கயிறு ஆட்டப்படுவதனால்தான் என்று தெரிந்தால், பாவையின் அசைவைப் பாராட்ட மாட்டாய்.

அதுவேபோல், ஆரவார வாழ்வு உள்ளவனை ஆட்டுவது, வயிறுபுடைக்கச்செய்யும் உணவும், மேனிமினுக்கும் உடையும், இனம்பெருக்கும் செயல்களையும் மட்டும் கொண்ட விலங்குப் பண்புதான். அதனைக் கண்டு மயங்காதே. அவன் இயக்கம், மரப் பாவை இயக்கம்' என்று அழகுற அமைக்கின்றார் வள்ளுவனார்.

நாண் அகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர் மருட்டியற்று

# குறள் மலர் வாழி!

[புலவர் கூ. ஆறுமுகன், காந்தி கல்வி நிலையம், கூகலூர்]

(1)
அறத்துறையில் பொருளீட்டி இன்பம்பெற்று
அழியாத நற்புகழை உலகமெங்கும்
மறத்தமிழன் ஆட்சியிலே செய்தானென்ற
மன்னியநல் வாய்மையெலாம் முப்பாலாக்கி
இறவாத உலகிற்கு ஈந்தவள்ளல்
இன்றமிழே உயர்வென்றுக் கொண்டானென்ற
திறமனைத்தும் விளக்குதற்குத் திருச்சிதன்னில்
திருக்குறளின் மலராகப் பூத்தாய்வாழி!

(2)
இன்மொழிகள் பலவற்றும் இனிமைத்தாகி
இறவாத புகழ்நாட்டி இயங்குமிந்த
அன்னைமொழி இழிவென்று அரற்றும்வஞ்சர்
அறியாமை இருளகன்று அறிவுமிக்கு
நன்மைபெறு ஒளிகாண திருச்சிதன்னில்
நறுங்குறளின் மலராகப் பூத்துவிட்ட—
தென்தமிழின் நறுஞ்சுவைசேர் அமிழ்தே! உள்ளம்
தெளிவிக்கும் குறள்மலரே! பெருகிவாழி!

(3)
அழுக்கடைந்த சாக்கடையாய்த் தமிழைஎண்ணி
அறியாமைக் கொடுமையினால் வழுவைச்சேர்த்து
இழுக்கடையச் செய்கின்ற எழுத்தாளர்க்கு
இன்னறிவைப் புகட்டுதற்கு மலர்ந்தாயென்று
வழுத்துகிறோம் தமிழர்குல மொருங்குகூடி
வருகஎங்கள் பழங்கால வாழ்வின்பேறே!
செழுங்குறளின் நறுங்கனியே! செந்தமிழ்த்தாய்ச்
செல்வமே உளம்பூத்தோம், பெருகிவாழி!

# ஆங்கில வண்ணம்...?

ஆங்கிலம் எழுதிய வண்ணம் உச்சரிக்க முடியாத மொழி. இலக்கணம் கற்ற பின்னரும், காதாற் கேட்ட பின்னருமே மாறுபாடற உச்சரிக்கமுடியும். இதனைக் குரோயர் (Crower) போன்ற ஆங்கிலேயரே கூறியுள்ளார்.

## — கோபமும் காமமும் —

(முனிவர்)

கோபத்தினை நெருப்பு என்று கூறுகிறார்கள். ஏன்? காமத்தையுங்கூடத் தான் அப்படிக் கூறுகிறார்கள். காமத்தீ என்றெல்லாம் பேசுவதுண்டல்லவா? கோபம் அடக்கமுடியாத ஒன்றாகத்தான் நிலவுகிறது. காமம் மட்டும் என்ன? அதுவும் அப்படித்தான்! கோபத்தினால் ஏற்படும் ஆபத்துகள் மிகப்பல சிலபல சந்தர்ப்பங்களில் காமமும்கூட அவ்வாறு உண்டாக்கிவிடுகின்றது என்றுதான் பார்க்கின்றோம்

கோபமும் காமமும் ஒன்றுசேரும் ஒரு இடத்தினை ஆசிரியர் அழகுற அமைத்துக் காட்டி விடுகின்றார். கோபந்தான் பகைமைக்குக் காரணம் என்றால் உண்மையே தான். கோபம், பகைமையூட்டிப் பிரிந்திருக்க வைத்துவிடுகிறதல்லவா?

கோபங்கொண்ட பகைவர்கள் ஒருவரையொருவர் பார்ப்பதுமில்லை, பேசுவதும் இல்லை-சந்திக்கவே விரும்புகின்றார்களில்லை. இதுதான் தப்பு என்கிற இடம் ஒன்று உண்டு! பகைத்துக்கொண்டவர் பின்னாலேயே பகைக்கப்பட்டவர் ஓடுகிறாராம். ஆ! என்னே! பகைத்துக்கொண்ட பகைவர் பின்னே ஓடுகின்றாராம்! ‘மானம்கெட்டவர்கள்’ என்று தானே நமக்குக் கூறத் தோன்றும். அதுதான் இல்லையாம் அவருக்கு! மானமாவது ஒன்றாவது! ஓடு பின்னாலேயே என்று துரத்துகிறதாம்! எது? அந்தக் காமம்!!

பெருந்தன்மை என்று கூறுவார்களே உலகப்பழக்கத்தில், அப்படிப்பட்ட ஒன்று இந்தக் காமவேதனைக்காரர்களிடத்தில் இருக்கமுடியாதோ என்று பேசுகிறது ஒரு குறட்பா! மதிப்பு-பெருந்தன்மை-உயர்வு இத்தனையையும் கீழே போட்டுவிட்டு ஓடச் செய்கிறதாம்-செய்துவிடுமாம், காமப்புயல்! இப்படிப்பட்ட உண்மையினை அந்த நாயகி மூலம் சொல்லவைக்கின்றார் ஆசிரியர்.

“......பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவது ஒன்று அன்று”

என்று குறளடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அறியமுடியாது (தெரிந்துகொள்ள முடியாது) என்கின்றாள் அந்த நாயகி. எதனை? பெருந்தகையென்பதனை. ஏன்? காமநோயால் வாதனைப்படுவதால் என்க. தான் படுகின்ற வேதனையினை-தன்னுடைய மனம் போகும் போக்கினை-உலகப் பழக்கத்தின்மேல் வைத்துக்காட்டி இங்ஙனம் கூறவருகின்றாள் அந்த நாயகி.

தன்னை மறந்து பிரிந்திருக்கும் நாயகரைப் பகைவர்போல எண்ணி ‘செற்றார்’ என்று குறிக்கின்றாள். செற்றவர் என்பது தன்னைவிட்டுப் பிரிந்துபோன அவர் என்னும் பொருளில்வைத்து பகைவரானவர் என்ற தன்மையில் கூறினாள். சரி; அப்படிப்பட்டவரை இவளுமல்லவோ ‘போனால் போகட்டுமே’ என்று இருக்க வேண்டும். அப்படித் தான் கூறிவிட்டு இருக்கமுடியவில்லையாம் அந்த நாயகிக்கு! தன்னைப் பிரிந்து-தன்பால் கோபம்கொண்டவர்போல் மறந்திருக்கும் அவரை நாயகியும் மறந்திருந்தால்தான்-கோபித்த ஒருவரிடத்திலே, போகாதிருக்கும் பெருந்தகைமை கொண்டவர்போன்ற-சிறப்பும் அவளுக்கிருக்குமெனலாம்.

இந்தமாதிரியான நோக்கம் உலகப் பொதுவாழ்க்கை மக்களிடத்தில் இருக்கலாமாம்! இருக்குமாம்! ஆனால் காமவேதனையடைந்தவர்களிடத்திலே கோபம் மறைந்துவிடுமாம். காமம் என்பது கோபத்தினைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டு மனோநிலையினை நிறைவேற்ற முந்துமாம்! எனவே கோபத்தின் வேகம் காமத்தில் அடிபட்டுவிடும் என்கிற நுணுக்கத்தினை உணர்த்தும் பொருட்டே மேற்கூறிய உண்மையொன்றினை உள்ளே பொதிய வைத்து ஆசிரியர் விளக்குவாராயினார்.

செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை
காமநோய்
உற்றார் அறிவது ஒன்று அன்று.

[நம்மை வெறுத்தவர் போன்ற பகைவரான நாயகரின் பின்னே போகாமல் இருக்கவேண்டும் என்ற பெருந்தன்மை காமநோய் வாய்ப்பட்டவர்களிடத்தில் இருக்கமுடியாதாம்.!]

தொடர்ச்சி

## பொருட்பால்] 1 [இறைமாட்சி 8

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)**
**இறையென்று வைக்கப் படும்.**

[முறைசெய்து - நன்னெறிகளால் முறையுடன் ஆட்சிசெய்து, காப்பாற்றும் - நாட்டினையும் மக்களையும் நன்முறையில் பாதுகாக்கின்ற, மன்னவன் - அரசன், மக்கட்கு - குடிமக்களுக்கு, இறையென்று- (மக்களில் ஒருவனேயானாலும்) கடவுள் போன்றவன் என்று, வைக்கப்படும் - கருதப்பட்டுப் போற்றப்படுவான்.]

விளக்கம்:—‘இறை’ என்ற சொல் பொதுப்பட வைத்துப் பேசப்படுவதாகும். மக்களின் உயிர் மன்னன் ஆட்சிமுறையின் நன்மையில் காப்பாற்றப்படவேண்டியதாகும். அறத்துப்பால் ‘கடவுள் வாழ்த்து’ என்னும் முதலதிகாரத்தில் இறைவனைப் பற்றிய–இறைத்தன்மையினை விளக்கினார். தனக்கு ஒப்புவமை இல்லாதவன் இறைவன் என்று கூறியதினால், முறை செய்து காப்பாற்றும் மன்னவனும் இறைவனேயாவன் என்று கூறுதல் பொருந்தாதாகையால், ‘இறையென்று வைக்கப்படும்’ என்று அமைத்தார் என்க. ‘முறை’ யென்ற சொல் பரந்த பொருளில் கூறப்பட்டுள்ளது. பொருட்பாலில் காணப்படும் அரசியல் அங்கஇயல் ஆகிய இருபகுதிகளிலும் வகுத்துக் காட்டப்படும் அரசியல் நெறிகள் அத்தனையும் ‘முறை’ என்பதில் அடங்குவதாகும். காத்தல் என்னும் பேராற்றலாகிய தொழில் இறையென்று அழைக்கப்படும் காரணத்திற்கு அடிப்படையாக நின்றது. ‘காத்தல்’ என்பது முறைசெய்தலினாலேதான் இயலும் என்றபடியால்தான் ‘முறை செய்து காப்பாற்றும்’ என்று கூறினார். ‘வைக்கப்படும்’ என்பதுபோன்ற அமைப்புமுறை திருக்குறளில் பல இடங்களிலும் காணப்படுவதாகும். ‘இல்வாழ்க்கை’ என்னும் அதிகாரத்திலும் கண்டு தெளிக. ‘இறைமாட்சி’ என்ற இந்த அதிகாரத்தினைப் படிக்கும்பொழுது, செங்கோன்மை கொடுங்கோன்மை, வெருவந்தசெய்யாமை என்ற அதிகாரங்களையும் ஒப்பிட்டுப் பார்த்துக் குறளறங்களின் விளக்கங்களைப் புரிந்துகொள்ளல்வேண்டும்.

### ஏலாது!

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த திருக்குறள் நூலின் இறுதிப் பகுதியாகிய ‘இன்பத்துப் பால்’ செந்தமிழ் மொழிக்குச் சிறப்பாய் உரிய அகப் பொருள் நாடக வழக்குப் பற்றிச் செய்யப்பட்ட தொன்றாகலின், அது, தொல்காப்பியப் பொருளிலக்கணம், நக்கீரனார் அருளிச் செய்த ‘இறையனார் அகப்பொருளுரை’ மாணிக்க வாசகப் பெருமான் அருளிச் செய்த ‘திருச்சிற்றம்பலக் கோவையார்’ முதலான நூல்களைப் பயின்றார்க்கன்றி ஏனையோர்க்கு எளிதில் பொருள் விளங்குவதன்று. பரிமேலழகியார் அதற்கெழுதியிருக்கும் உரையுஞ் சுருக்கமாகவே யிருத்தலால் அவ் வுரைகொண்டும் அதன் பொருளை எல்லாரும் விளங்குதல் ஏலாது!

—மறைமலையடிகள்.

## கொம்புத்தேன்—

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கிணற்றின் அருகாமையில் இருந்த பெரிய மரமொன்றின் மரக்கிளை அவனுடைய தலைக்கு மேல் நேராகத் தெரிவதைப் பார்த்தான். காற்றில் அசைந்துகொண்டிருந்த அந்தக் கிளையிலிருந்த தேன்கூடு ஒன்று உடைந்து அதினின்றும் ஒழுகிய தேன் அவன் உடம்பின்மேல் பட்டுக் கொண்டிருந்தது. வாயைத்திறந்தான். ஆ! நாக்கினை நீட்டவே அந்தத் தேன் சொட்டுகள் அவனை அப்படியே மதி மயங்கிய சுவையின்பத்தில் ஆழ்த்தி விட்டன. இடிவிழுந்ததைப் போன்ற துன்பங்களைச் சிறிது நேரம் மறந்திருந்தான்! பருகப் பருகக் கொம்புத்தேன் பரவசப் படுத்தியது. அப்படியாகச் சிறிது நேரம் சென்றது. யானையும் போயிருக்குமென்று எண்ணினான். மெதுவாகக் கிணற்றை விட்டுத் தட்டுத் தடுமாறி மேலே வந்துகொண்டிருந்தான். வந்தும் விட்டான் யானையையும் காணோம். ஒரு புது மனிதனாகவே மாறிவிட்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.

"துன்பம் வருவது இயற்கை. வருகின்ற துன்பம் எங்கிருந்தாலும் வரும். இருக்கும் இடத்தை விட்டு எங்கேயாவது ஓடிவிடலாம் என்பது பெரிய பைத்தியக்காரத்தனமும் முட்டாள் தனமும் ஆகும். துன்பத்திலும் இன்பம் உண்டாகும், வரும், என்பதும் இயற்கைதான். ஒரேமனதுடன் இன்பத்தையும் துன்பத்தையும் தெளிவான மனதுடன் அனுபவிப்பதே அறிஞர்கள் வாழ்க்கை"— என்பன போன்ற எண்ணங்கள் எதிர்பாராத விதமாக, கந்தசாமி உள்ளத்தில் எழுச்சியுண்டாக்கின. வீடு சேர்ந்தான்.

இன்பம் விழையான் இடும்பை
இயல்புஎன்பான்
துன்பம் உறுதல் இலன்.

[இன்பமெல்லாம் வரவேண்டும்—வந்து கொண்டே இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டு இருக்காமலும், இடும்பைகள் வருவதும் இயற்கைதானே என்றும் எண்ணிவாழ்பவன், எக்காலத்திலும் துன்பமே அடையமாட்டான். நிம்மதியும் இன்பமும் எப்பொழுதும் அவனைச் சூழ்ந்து கொண்டிருக்கும். இது உண்மையிலும் உண்மை.]

தொடர்ச்சி

## காமத்துப்பால்] 1 [தகையணங்குறுத்தல்-8

**ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு**

[ஞாட்பினுள் - போர்க்களத்தில், நண்ணாரும் - எதிரில் வந்து எதிர்த்திராத பகைவர்களும், உட்கும் - அஞ்சுகின்ற, என் பீடு - என்னுடைய திறமை நிறைந்த பெருமை கொண்ட வலிமை யெல்லாம், ஒண்ணுதற்கு - இப் பெண்ணின் நெற்றியின் அழகு ஒன்றினைக் கண்ட மாத்திரத்திலேயே. உடைந்ததே - உடைந்துபோய் விட்டது; அந்தோ!]

வலிமை நிறைந்த வீரனாகிய அவ் ஆடவன் அப் பெண்ணின் நெற்றி யழகினைக் கண்டு கலங்கிய நிலையில் சொல்லுகின்றான்.

விளக்கம் :—காதலின் வேகம் - மங்கையின் அழகு - எஃகு போன்ற வலிமை நிறைந்த ஆடவனையும் கதிகலங்கச் செய்து விடும் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும். 'ஒள் நுதல்' (ஒளி பொருந்திய அப் பெண்ணின் நெற்றி) ஒண்ணுதல் என்று கூறப்பட்டது.

போர்க்களத்தில் நின்ற அவ்வீரனைப் பார்த்துப் பயந்தோடிய பகைவர்கள், தாங்கள் ஓடிச் சென்ற இடத்தில் இருந்த பகைவர்களிடம் சொன்னார்கள். போர்க்களத்திற்கு வந்து இந்த வீரனை நேரில் பார்க்காத அந்தப் பகைவர்கள், சொல்லக் கேட்ட மாத்திரத்திலேயே அஞ்சி நடு நடுங்கி விட்டனராம். அப்படியென்றால் அந்த வீரனுடைய திறமையும் வலிமையும் எப்படி இருக்க வேண்டும் என்று சிந்தித்து உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அப்படிப்பட்ட வீரன் இந்த மாதினைக் கண்டு இவ்வாறு கூறுகின்றான் என்றால்-கதிகலங்கி விட்டான் என்றால் - ஆ! அப் பெண்ணின் அழகின் பெருமைதான் என்னே! ஒரு அங்கமான நெற்றியின் அழகிற்கே இப்படிப் போய்விட்டான் என்றால், மற்ற அங்கங்களின் அழகினையும் கண்டு எப்படியாவனோ என்பது உய்த்துணர வேண்டிய குறிப்பு! 'இந்த ஒரு அங்கத்திற்கே எனது வலிமை யெல்லாம் உடைந்துவிட்டதே, மற்ற அங்கங்களின் அழகினைக் கண்டு மகிழும் வலிமைக்கு என்ன செய்வேன்?' என்றுஎண்ணுபவனாகி விட்டான் என்று கூறலும் பொருந்துமென்க.

வீரனுக்குடைய மனோவலி—திடம்—கட்டு அத்தனையும் சிதறடிக்கப்படும் நிலையில் அவனை நிறுத்திக் காட்டி 'உடைந்தது' என்ற சொல்லினை நயமாக அமைத்தார் ஆசிரியர். 'என் பீடு' (எனது வலிமை) என்று பெருமிதத்துடன் கூறும் வீரனின் சொற்கள் உன்னுதற்குரியன. போர்க்களம் – போர்த்திறம் – வீரம் என்பவைகளை மிஞ்சிவிடுகிறதாம் காதல்வேகம். 'உடைந்து விட்டதே' என்று நடந்து போன காரியத்தைப் பேசுகையில் தற்பெருமையினையும் கூறும் முறையில் அவ் வீரனும் பேசுகின்றான். இவ்வளவு பேச்சும் அவனுடைய நெற்றியின் அழகினை மிகுதிப்படுத்திவிட்டது என்பதையே அறிதல் வேண்டும்.

## காணல் முடியாது

உயர்ந்த கருத்துக்களும் தூய்மையான ஒழுக்க விதிகளும் தூய்மையாக நினைப்பதும் எழுதுவதும் இயற்கையில் காணக் கூடியனவே என்னும் உண்மையைத் தெரிவிக்கவல்லதாயிருப்பதால் (குறள்) ஆர்வத்துடன் கற்கப்படும். இந்நூலாசிரியர் தாங்கூறவந்த அறவுரைகளை அழுத்தந் திருத்தமாகச் செய்யுள் நடையிற் கூறுவதை யொப்ப உள்ள மற்றொரு நூலை மக்களாய்ப் பிறந்தோர் பேசும் வேறு எம்மொழியிலுங் காணல் முடியாது.

Rev. Percival.

## பிறப்பு

செய்யார் வட்டம் நெடும்பிறை கிராம திராவிட கழகச் செயலாளர், தோழர் N. P ஆண்டி அவர்கள் வாழ்க்கைத் துணைவி தோழியர் ஆதிலட்சுமி அம்மையார் 25—8—50 வெள்ளி இரவு 2–30 மணிக்கு ஆண் மகவு ஈன்றனர். தாயும் சேயும் நலம். இதன் நினைவாக 'குறள் மலர்' வளர்ச்சிக்கு நன்கொடை ரூபாய் ஒன்று அளிக்கப்பட்டது.

# வள்ளுவர் பேசினால்...!

(முனிவர்)

1

## உலகப் பெருமக்களே !

கற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்குங் கூட 'கேட்டல்' என்னும் அரியகுணம் கண் போன்றதாகும் என்று நினைவூட்டுகின்றேன். பிறர் சொல்லும் நற்கருத்துக்களை அமைதியுடன் கேட்டுணரப் பழகுதல் வேண்டும். அமர்ந்திருந்து கேட்டல் என்பதும் அருமையான பண்பு ஆகும். கல்வியில்லையே—கற்க வில்லையே—நல்வழிகளைக் கற்றுப் பயனடைய முடியவில்லையே என்று வருந்துவார்க்குத்தான் சொல்லுகின்றேன். கற்காமல் இருந்து விட்ட நிலையில் இருந்தாலும் கேட்கப் பழகிக்கொள்ளுங்கள்.

"கற்றிலன் ஆயினும் கேட்க"—என்பது உலக உண்மையாகும். கேட்டுப் பழகினால் தான், பிறருக்கு எடுத்துக் கூறவும் முடியும். மற்றவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டும் என்ற பழக்கம் வெற்றிபெற வேண்டுமென்றால் நீங்களும் பிறர் சொல்லுவதைக் கேட்கும் நற்பழக்கத்தினைக் கொண்டிருக்க வேண்டும்.

"நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய வாயினர் ஆதல் அரிது" என்ற கருத்தினை உள்ளத்தில் பதியவைத்துக் கொள்ளுங்கள். பேசுங்கால் மற்றவர்கள் உள்ளம், இன்பமுற—வியப்புற—பேசுபவர்பால் அன்புபெருகப் பேசுதல் வேண்டும். வாய்ச்சொற்கள் அமைதியும் சாந்தமும் தற்பெருமையற்றவைகளாகவும் இருத்தல் வேண்டும். அவ்வரிய பண்புகள் பெறுதற்கு வழியாக அமைந்துள்ளதுதான் 'நுணங்கிய கேள்வியார்' ஆவது ஆகும். அறிஞர் கூறும் சொற்களின் நுணுக்கமான கருத்துக்களைத் துருவித் துருவி உணர்ந்து கொள்ள வேண்டும்.

மக்கட் பிறவியில் நல்வழிகாட்டும் ஊன்றுகோலாக அமைந்திருப்பதும் கேள்விப் பழக்கமேயாகும். கேள்விப் பழக்கமென்பது பிறர் கூறுவதைக் கேட்டின்புறும் பழக்கமென்று தெரிந்து கொள்ளுங்கள். அதற்குத்தான் கேள்வி என்று பொருள். பேசிக் கொண்டிருப்பவர்களைப் பேசவே விடாமல் கேள்விமேல் கேள்வியாகக் கேட்பதுதான் கேள்வி என்று நினைத்துவிடாதீர்கள்!!

'நமக்கெல்லாம் நேரம் எங்கே இருக்கிறது, இப்படியெல்லாம் சொற்பொழிவுகளைக் கேட்க?' என்று சிலர் பேசுவதையும் நீங்கள் அறிவீர்கள். 'நமக்குத் தெரிந்ததே போதும்; நமக்கு இனி தெரிந்துகொள்ள வேண்டியது என்ன இருக்கிறது?' என்று சொல்லுபவர்களும் இருக்கிறார்களல்லவா? இன்னும் கூடச்சிலர், 'இவர்என்ன அப்படியெல்லாம் சொல்லிவிடுகிறார்? ஏதோ அங்கேயும் இங்கேயுமாக இரண்டொன்றைச் சொல்லி விட்டுப் போகிறார்; அதில் நாம் என்ன கண்டுகொள்ள முடிகிறது?' என்ற மாதிரியில் தமக்கெல்லாம் தோன்றியபடிப் பேசிவிடுகிறார்கள்.

அருமைப் பெருமக்களே! இப்படிப்பட்ட பயனில்லாத வார்த்தைகளில் உங்கள் எண்ணத்தைச் செலுத்தாதீர்கள். நாம் பிறர் சொல்லுவதைக் கேட்க, சிறிது நேரந்தான் காலம் கிடைக்கிறது என்றால், அந்தச் சிறிதளவாவது கேட்டு விட்டுச் செல்லுங்கள். ஒருவர் சிறிதளவாகவும் சில செய்திகள் தான்—சில கருத்துக்களை மட்டும் கொஞ்சமாகத்தான் சொல்லுகிறார் என்றாலும் அதை மட்டும் கேட்டு யாது பயன் என்பது போலப் போய்விடாதீர்கள். கொஞ்சநேரமாக இருந்தாலும் சரி, அல்லது கொஞ்சம் செய்தியாகவோ கருத்தோ இருந்தாலும்சரி அதையும் கேட்டு மகிழப் பழகுங்கள். நீர்த்துளி என்பது மிகச் சிறியதென்றுதான் நாம் பேசினாலும், ஓடும் ஆறுகளும் மிகப் பெரிய நீர் நிலைகளும் எங்கிருந்து வந்தன என்பதை எண்ணிப்பாருங்கள்! உங்களுக்கு உலக நீதியான பெருமையினைக் கூறுகின்றேன். நினைவில் நன்கு நிறுத்திக்கொள்ளுவீர்களாக.

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்"—உங்கள் அறிவினையும் பயன் படுத்தி இதன் உண்மையினை உணர்ந்து கொள்ளுங்கள். அறிவினை அறிந்து – பயன்படுத்தும் பழக்கம் இல்லாத மக்கள் **மாக்கள்** என்ற இழி நிலையில்தான் இருத்தல் வேண்டும். அறிவுடைய பெருமக்களாக நீங்கள் இருக்க வேண்டுமென்பதே எனது பெருவிருப்பம். சொல்லுபவர்கள் யாராக இருப்பினும் சரி; அல்லது சொல்லப்படும் பொருள் எதுவாக இருந்தாலும் சரி; நீங்கள் உங்கள் அறிவு கொண்டு சிந்தித்துப் பார்த்து உண்மையினை உணர்ந்து கொள்ள முயற்சியுங்கள். **'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'** என்பதுதான் அறிவுடைய மக்களின் நல்லுரையாக நல்வழியாக இருத்தல் வேண்டும் உலக முன்னேற்றம் என்பது இந்தத் தன்மையில் இருப்பவர்களால்தான் முடியும் 'வாழ்க்கையில் ஒரு புதுமை' என்பது, அடுத்தபடியாக நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதாகும். பின்னர் கூறுகின்றோம்.

[தொடரும்

## கல்லும் - மண்ணும்!

தேசீயக் கவி, சுப்பிரமணிய பாரதியார் புதுவையில் வசித்து வந்த பொழுது ஒரு நாள் தெரு வொன்றின் வழியாக நண்பர் ஒருவருடன் போய்க்கொண்டிருந்தார். வீட்டின் திண்ணையில் பாடம் படித்துக் கொண்டிருந்த பையன் ஒருவன் "இளமையில்" என்று சொல்லியது பாரதியார் காதில் பட்டது. உடனே பாரதியார் 'முதுமையில் மண்' என்று சொல்லிக் கொண்டே போனார். உடனிருந்த நண்பர் திகைப்புற்று, பாரதியாரைப் பார்த்து "ஏன் அப்படிச் சொன்னீர்கள்?" என்று கேட்டார்.

பாரதியார் பின்வருமாறு விடையளித்தார்:— "இளமையில் கல்" என்று வாயளவிலேயே கூறி நடைமுறையில் தக்க முயற்சிகள் எடுக்காததினால்தான் நமது மக்கள் இரண்டு தலைமுறையாகக் கல்லாகவே இளமையில் ஆகிவிட்டார்கள். இப்பொழுது மண்ணாய்ப் போனோம்" என்று கூறியதைக் கேட்ட அந்த நண்பர் உருகிப் போனார். பாரதியாரின் நகைச் சுவைகள் பயனளிக்கும்-உணர்ச்சி யூட்டும் சுவைகளன்றோ !

ஒரு நாள் கடைவீதிக்குக் காய்கறிகள் வாங்கி வரச் சென்ற பாரதியார் ஒரு ரூபாய்க்குக் கீரையை வாங்கித் தலையில் சுமந்துகொண்டு வீட்டிற்கு வந்தார். அவருடைய மனைவியார் பார்த்தவுடன் சிரித்துக் கொண்டே கணவரைப் பார்த்து "ஏன் இவ்வளவு?" என்றுகேட்டார்களாம். பாரதியார், "உனக்கு வேண்டியதை எடுத்துக்கொள். மீதியை, சமைப்பதற்குக் கீரை கூட இல்லாத குடும்பங்கள் எத்தனையோ இருக்கின்றனவே. அவர்களுக் கெல்லாம் கொண்டுபோய் கொடுத்து வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே அப்படியே வீடு வீடாகச் சென்று கொடுத்து விட்டு வந்தார்களாம்! என்னே! தமிழகம் பெற்ற தனிப் பெரும் புலவரின் தகைமை !

### பரிதாபம்!

"ஆழ்ந்து அகன்ற அரிய கருத்துக்களைப் பொருத்தமான சொற்களிற் சுருக்கமாகக் கூறும் இந்நூல், (திருக்குறள்) இந்தக்காலத்துத் தமிழ் மக்களால் பாராட்டப்படும் அளவு பயிலப்படாதது பரிதாபமே"

—அ. மாதவையா.

# உலகம் போகும் போக்கு !

(அருண்மொழி)

**காஷ்மீர் தகராறு பற்றிய பேச்சு முறிவு!**
**கொரியாவில் கம்யூனிஸ்டு - பிரிட்டன் படைகளின் கடும் சண்டை !**
**திபேத் மீது செஞ்சீனா பாயாது !**

என்ற செய்திகள் நாட்டில் பரபரப்பைப் பரவச் செய்கின்றன. காஷ்மீர் தகராறு பற்றிய சிக்கல் அறுக்கப்பட்டு விட்டால், இந்திய-பாகிஸ்தான் உறவு நீடிக்க மேலும் ஒருவழி பிறக்கும் என்று நம்பினார்கள். உலகக்கூட்டு நாட்டுக்கழகத்தாரால் (U. N. O. கழகம்) போக்கப்பட்ட தூதுவர் சர் ஓவன் டிக்சன் எப்படியும் 'உடன்பாடு' உண்டாக வழி தேடுவார் என்றே அனைவரும் நம்பினர்.

சர். ஓவன் டிக்சன் நான்கு வழிகளில், காஷ்மீர் சிக்கலை ஆராயப் புகுந்தார். இந்திய - பாகிஸ்தான் அரசியலைச் சார்ந்த பொறுப்புள்ள தலைவர்களைக் கண்டு பேசினார்; காஷ்மீர் சிக்கலுக்கு அடிப்படையான நிலைமைகள் யாவை யென்பதை அறியவே அதனைச் செய்தாராம். பின்னர் இந்திய ஆட்சியின் மேற்பார்வையிலுள்ள காஷ்மீர் பகுதியையும், 'ஆசாத் காஷ்மீர்' என்ற பகுதியையும் நேரில் பார்வை யிட்டார்; காஷ்மீரின் சுற்றுப் புறங்களை உணருவதற்காக அவ்வாறு சுற்றிப்பார்த்தாராம். மூன்றாவதாக வழக்கம்போல் 'மூவர்' மாநாட்டினைத் தில்லி நகரில் கூட்டினார். அந்த எற்பாடும் ஒப்பந்தம் எற்பட வழியின்றி ஒழிந்தது.

கடைசியாகக் காஷ்மீர் தகராறு பற்றிய தனது சொந்தக் கருத்துக்களை, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும்எடுத்துக்கூறினார். இரு நாட்டினரில் ஒருவர் கூட எற்றுக் கொள்ளாமற்போயினர். இந்திய - பாகிஸ்தான் பற்றிய சிக்கலைத் தீர்க்க வந்த வெளிநாட்டார் தமது பேச்சு முறிந்துவிட்டதாகக் கூறிவிட்டு அமெரிக்காவுக்குப் பறந்துபோகிறார்.

'எறக்குறைய 800 நாட்களாக, காஷ்மீர் தகராறுபற்றிய நிலைமையை துருவித்துருவி ஆராய்வதாகக் கூறும் U. N. O. கழகத்தார், கொரியா நிலைமையை மட்டும் உடனே சீர்தூக்கிப் பார்ப்பார்கள் என்று நம்புவது பைத்தியக்காரத்தனமாகும்' என்று 21-7-50 'குறள் மலர்' இதழில் கூறிய நமது கருத்தை இங்கு நினைவூட்டுகிறோம்.

அடுத்தாற்போல், கொரியச் சண்டை அச்சத்தை உண்டாக்குகின்றது. அமெரிக்காவிடம் ஆட்பட்டுக் கிடக்கும் பிரிட்டன், காலாட்படை, கவசப்படை, பீரங்கிப்படை ஆகிய எல்லாப் படைகளையும் தென் கொரியப்போர்முனைக்கு ஓட்டியிருக்கிறது; ஹாங்காங் தீவிலுள்ள படைகளையும் அமெரிக்காவுக்குத் துணையாக விரட்டியிருக்கிறது.

உலகப் பாதுகாப்புக் குழுவில் (Security Council) மீண்டும் இரஷ்யாவைச் சேர்த்துக்கொள்ள வேண்டு மென்றும், கம்யூனிஸ்டு சீனாவையும், அக் குழுவில் உறுப்பினராகச் சேர்க்க வேண்டு மென்றும், இந்தியா செய்த முயற்சி பயனற்றதாகி விட்டது. அமெரிக்கர் இம் முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டு விட்டனர். இது வருந்தத்தக்கது. "அமெரிக்கா 'ஆடு (!)' என்றால் ஆடுவதும், இங்கிலாந்து 'இழுத்துப் போடு (!)' என்றால் இழுத்துப் போட்டுக் காலங்கடத்துவதும் தான், U. N. O. கழகத்தார் செய்ய முடியுமே தவிர, உலகில் அமைதியை நிலவச் செய்ய எதும் செய்ய முன்வராது-முடியவில்லை" என்று, 21-7-50ம் நாளைய இதழில் நாம் குறிப்பிட்டிருந்ததை மீண்டும் நினைவு கூரச் செய்கின்றோம்.

ஆலைத் தொழிலால் மிஞ்சிய பெருக்கம், (Over production through machinery) இருக்கும் வரையிலும், உலகின் ஒரு பகுதியில் வறுமை ஆட்சி செலுத்தும் வரையிலும் கட்டாயம் உலகில் அமைதி நிலவ வழி எற்படாது என்றே நம்புகின்றோம்.

'திபேத்' நாட்டின் திகைப்பு ஒருவாறு நீங்கிவிட்டதாகக் கூறுகின்றனர். 'திபேத்' நாட்டின் மேல், செஞ்சீனா படையெடுக்காதவாறு தடுத்துக்கொள்ள, இருதரப்பாரும் இந்தியாவில் கூடிப் பேசுவார்களாம்.

உலகம் போகும் போக்கு, மூன்றாவது உலகப் போர் பிறப்பதற்கு வழி கோலாமல் இருப்பதாக நம்ப இடமில்லை.

---

## நினைத்துப்பாருங்கள் !

பத்தாயிரம் ரூபாய் செலவு செய்து பத்து மாதங்கள் முயற்சியாக வேலை செய்து ஒரு கட்டிடம் கட்டவேண்டி இருக்கிறது. ஆனால் பத்தே மணி நேரத்தில் (ஏன், குறைந்த நேரத்திலும்) ஒருபுட்டிமண்ணெண்ணெய்ச் செலவில் அக்கட்டிடத்தையே சாம்பலாக்கி விடலாம், கொஞ்சம் பற்ற வைத்து! நாள் பல செலவு செய்து நற்கருத்துக்களை மக்களுக்குச் சொல்லி இருந்தாலும் தீய உள்ளம் படைத்த ஒருவன் தந்திர வஞ்சகத்தால் அத்தனையையும் கெடுக்க முடியும்! முன்னூறு அடி உயரம் இருக்கக் கூடிய கோபுரத்தின் அடியிலோ அருகாமையிலோ இருக்க அஞ்சவேண்டியதில்லை. ஆனால் மூன்றடி ஆழமுள்ள குழியின் அருகாமையில் நின்றாலும் பயந்துதான் ஆகவேண்டும் !

—குறளார்.


## 'குறள் மலர்'

(திருக்குறள் கிழமை இதழ்)

வெள்ளிதோறும் வெளிவரும்.

**கட்டண விவரம்.**

| | | |
|---|---|---|
| ஒரு ஆண்டுக்கு | ரூ. | 6—0—0 |
| அரை ஆண்டுக்கு | ரூ. | 3—4—0 |

தனி இதழ் 2 அணா

விற்பனை உரிமை வேண்டுவோர் இதழ் ஒன்றுக்கு ஒரு ரூபாயாக முன்பணம் கட்டி விண்ணப்பிக்கவும். 5 இதழ்களுக்குக் குறைந்த விற்பனை உரிமை இல்லை. விற்பனையாகாத இதழ்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப் படும். V. P. P. இல்லை.

★

**விளம்பர விழுக்காடு.**

| | | |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ. | 60—0—0 |
| அரைப்பக்கம் | ரூ. | 35—0—0 |
| கால் பக்கம் | ரூ. | 20—0—0 |
| 1 பத்தி 1 அங்குலம் | ரூ. | 3—0—0 |

நீடித்த விளம்பரங்களுக்கு எழுதவும்.


ஆசிரியர் : திருக்குறள் வீ. முனிசாமி, வெளியிடுவோர் : ந. கணபதி (பென்னக்குணம்), அச்சிடுவோர் : வெ. மாணிக்கம் பிள்ளை, இம்பீரியல் அச்சகம், 1, பெரியகம்மாளத் தெரு, திருச்சிராப்பள்ளி.